
கற்பகம் திங்கள் இதழ்
KATPAKAM
விலை ரூ.10/-

குறளமுதம்-5

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஒருவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.



அதிகாரம்-1 அறத்துப்பால் -கடவுள் வாழ்த்து

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு"

இறைவனின் மெய்யான புகழை விருப்பத்தோடு சொல்லிப் போற்றுபவரிடம் அறியாமையால் விளையும் பெருந்துன்பங்களும் சேர்வதில்லை

மலர்-01 மார்ச்-2008 இதழ்-05

## -11 இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களை-

# சமாசம் மாணவர்களுக்கு வழங்கி உதவி வருகிறது!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசம் மாணவர்களுக்கு சுமார் 11இலட்சத்து 25ஆயிரம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகர ணங்களை தனது அங்கத்துவ சங்கங்கள் ஊடாக தற்போது வழங்கி வருகிறதென சமாசப் பொதுமுகாமை யாளர் கற்பக த்திற்கு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில்,

சமாசம் நடைமுறைப்படுத்தி வரும் அங்கத்தவர் சமூக நல மேம்பாட்டு கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சமாசத்தில் இணைந்துள்ள ப.தெ.வ. அ.கூ. சங்கங்களின் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும், பணியாளர்களின் பிள்ளைகளுக்குமே இப்பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

சுமார் 4,000 அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் 500 சங்க பணியா ளர்களின் பிள்ளைகளுக்குமாக மொத்தம் 4500 மாணவர்களுக்கு இவ் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

இப்பாடசாலை உபகரண விநியோ கத்திற்கான அங்கீகாரம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாள ரிடம் பெறப்பட்டுள்ளது என்றும் வரு டந்தோறும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை ஊக்குவிக்கு முக மாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறதென தெரிவித்தார்.

# பயிற்சிகளுக்கு செலவிடப்படும் நிதி கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சிக்கான முதலீடாகும்

## யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை பீடாதிபதி



பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் என்பவற்றுக்கு நாம் செலவு செய்யும் பணம் வீண் விரயமா கிறது என்று கூறமுடியாது. இப்பண மானது மனித வளத்தைப் பெருக்கு வதுடன் கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சிக்கான ஒரு பாரிய முதலீடு என்றே கொள்ள வேண்டும் என்று யாழ் பல்கலைக்கழக வணிகத்துறை பீடா திபதி க.தேவராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கூட்டுறவு சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலை மையில் நடைபெற்ற பயிற் சிப்பட்டறையில் பேசும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

யாழ் வீரசிங்கம் மண்ட பத்தில் "நிகொட்" அனுசர ணையுடன் நடைபெற்ற "பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி முயற்சிகளுக்கான வினைத் திறன் அபிவிருத்தி" தொடர் பான பயிற்சிப் பட்டறையில் அவர் மேலும் பேசுகையில்,

இன்று அரச நிறுவனங்கள், வங்கிகள், அரச சார்பற்ற நிறுவன ங்கள் மற்றும் தனி யார் நிறுவனங்கள் ஆகியவற்றில் எல்லாம் நேர முகாமைத்துவம் மிகவும் அவதானமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இத்தகைய பயிற்சிப்பட்டறைகளை ஏற்படுத்தி அவற்றை நடைமுறைப் படுத்துவதன் மூலம் அனுபவம், மனிதவள அபிவிருத்தி, மற்றும் திறமைகளை வெளிப்படுத்தக் கூடியதாக உள்ளது. இந்நிலையில் யாழ். பல்க லைக்கழகம் சகல வழிகளிலும் இவற்றுக்கு உதவி புரியத் தயாராக உள்ளது என்றார்.

யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் பேசுகையில்,

(10 பக்கம் பார்க்க)

### அங்கத்தவர் கல்விப் பயிற்சி

கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கத்தின் சகல அங்கத்தவர்களுக்குமான கல்விப் பயிற்சி சங்க மண்டபத்தில் 13-02-2008ம் திகதி சங்கத் தலைவர் திரு.வ.சின்னராசா தலைமையில் நடைபெற்றது. இப் பயிற்சிக்குரிய விரிவுரைகளை விவசாய திணைக் களம், மாவட்ட கூ.சபை, சமாசம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் ஆற்றினார்கள்.

இப்பயிற்சியின்போது அங்கத்தவர்களுக்கான ஓய்வூதிய நலத்திட்டம் முக்கிய இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"

### சிந்தனைத்துளி

"உனது நெஞ்சுக்கு துரோகம் செய்யாதே, மனச் சாட்சியின்படி நட, நிச்சயமாக உனக்கு வெற்றி உண்டாகும். கள்ளம் கபடமற்ற உள்ளத்தோடு பிரார்த்தனை செய்" -ஞானி-

### கற்பகக்கரு

## வினைத்திறனுள்ள பணித்தொகுதி

கூட்டுறவு நிறுவனங்கள் காலத்தின் தேவை அறிந்து அதற்கேற்ப செயற்பட வேண்டிய காலகட்டம் இது. கூட்டுறவு, கூட்டுறவு என்று கூறிக்கொண்டு அங்கத்தவர்களுக்கு, மக்களுக்கு சேவை செய்கின்றோம் என்று பேச்சளவிலும் ஏட்டளவிலும் கூறிக்கொள்வதிலும் பார்க்க செயலில் செய்து காட்டவேண்டிய காலகட்டத்தில் நாம் செயற்பட்டு வருகிறோம்.

கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சி யானது மனித வளங்களை ஒன்றுதிரட்டி அவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய அதி உச்ச பயன்பாட்டை எப்பொழுது நாம் பெற்றுக்கொள்கிறோமோ அப்போதுதான் சாத்தியமாகும். கூட்டுறவு நிறுவனம் உணவுப் பொருட்களை விநியோகிக்கும் நிறுவனங்களாக செயற்படாது, உள்ளூர் வளங்களை ஒன்றுதிரட்டி அவற்றினை உற்பத்திசார்ந்த தொழில்துறைகளில ஈடுபடுத்தி வரவேண்டும். உற்பத்திசார்ந்த தொழிற் துறைகளை ஆரம்பிப்பதற்கு இந்நிறுவனங்களிற்கு போதியளவு நிதி வசதி இல்லாமை இங்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இந் நிதி வசதியை கூட்டுறவு நிறுவனங்கள் எவ்வகையில் ஏற்படுத்திக்கொள்ளலாம் என்பதில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டு அதற்குரிய கருத் திட்டங்களை தயாரித்து உரியவர்களிடம் சமர்ப்பித்து அனுமதி பெறப்படவேண்டும். இந்நிலையில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பனை தென்னை வளங்களிலிருந்து பெறப்படும் மூலப் பொருட்களிலிருந்து எத்தகைய பொருட்களை உற்பத்தி செய்யலாம் என்பதை சிந்திக்கவேண்டும். உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை சந்தைப்படுத்துவதற்குரிய வசதிகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு அரசின் உதவியை நாட வேண்டியுள்ளமை இங்கு அவசியமாகிறது.

உற்பத்தித்துறையில் இந்நிறுவனங்கள் அகலக்கால் பதித்து செயற்பட முன்வருகின்றபொழுது முதலில் அந்நிறுவனங்கள் வினைத்திறன்கொண்ட ஊழியர்களை தெரிவு செய்து அவர்களுக்கு துறைசார் பயிற்சிகளை வழங்கி அவர்களை தயார்படுத்த வேண்டியது அவசியம்.

பணித் தொகுதியில் அடங்கும் ஊழியர்கள் தமது பணியின் தன்மைகளை உணர்ந்து அதற்கேற்ற வகையில் செயற்படுவதற்குரிய மனோ பக்குவத்தை உடையவர்களாக இருக்கவேண்டும். கூட்டுறவு நிறுவனங்களின் வெற்றித்தன்மை அந்நிறுவனங்களின் பணித்தொகுதியிலேயே தங்கியுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். எனவே பொருத்தமான தொழிற்பாடுகளுக்கு பொருத்தமான பணியாளர்களை நியமித்து அவர்களுக்குரிய துறைசார்ந்த பயிற்சியை வழங்கி அவர்களது வினைத்திறனை மேம்பாடடையச் செய்வது கூட்டுறவு நிறுவனங்களின் இன்றைய தேவையாகும்.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-

## கூட்டுறவில் அர்ப்பணிப்புடன் உண்மையாக உழைத்த பெருமகன் சிவநேசன்



நன்றே செய்தல் அதையும் இன்றே செய்தல் என்ற உயரிய இலட்சியத்தோடு, பணியை வாழ்வாக்கி பட்டி தொட்டி எல்லாம் தடம் பதித்த கால்கள் நடை இழந்தனவோ! நேயம் நிறைந்த பாங்கால் அனைவரையும் அன்போடு அரவணைத்த கரங்கள் செயலிழந்து ஓய்ந்தனவோ! மேடைதோறும் முழக்கமிட்டு நெஞ்சங்களை வசமாக்கிய சிம்மக்குரல் அடங்கியதோ! கூட்டுறவு வாழ்வுக்கூடாக உயரிய சமூகத்தை கட்டியெழுப்ப நெஞ்சாரக் கொண்டிருந்த நினைவெல்லாம் அனல் ஆகிப் போனதுவோ?

பனை தென்னை வளக் கூட்டுறவில் ஓர் பணியாளராகி அதன் உச்ச மட்ட அமைப்புக்களின் நிறைவேற்றுத் தரப்பதவிகளை செம்மைசேர அலங்கரித்து, இக்கூட்டுறவாளர்களின் நெஞ்சங்களில் எல்லாம் நீக்கமற நிறைந்திருந்த உயர்திரு கி.சிவநேசன் அவர்கள் நாடாளுமன்றை நோக்கி தம் நகர்வைப் பதிக்கவும், இக்கூட்டுறவாளர் கரம் கொடுத்தனர். ஏணியாக தம்மை உயர்த்தி வைத்த இக்கூட்டுறவு சமூகத்தை கணமும் மறவாது நிதிசார் வளங்களால் துறையை வலுவாக்க அளப்பரிய சேவையாற்றி கணப்பொழுதில் எம்மையெல்லாம் நிர்க்கதிக்குள்ளாக்கி கதிகலங்க வைத்த சோகம் சொல்லிட வார்த்தை இல்லை.

ஊன் உறக்கம் பாராது, பகல் இரவு நோக்காது, அயர்வேதும் அறியாது, கண்ணியத்தோடும், அர்ப்பணிப்போடும் ஆற்றப்பட்ட சேவைகளை மனங்களில் சுமந்து அஞ்சலி செலுத்துகின்ற வேளை இத்துணை அவலமாக வந்து நேர்ந்ததே என்ற விசனம் மனங்களைக் குடைகின்றது.

நெடிதுயர்ந்த மரங்களிலே கடின உழைப்பால் உற்பத்தியை சேகரிக்கும் வல்லுனர்களின் வாழ்வுக்காக குரல் கொடுத்து, அவர்கள் வாழ்வு வளமாவதற்கு திட்டங்கள் சமைத்து பணிசார் நிலையிலுள்ளோரையும் ஒருங்கே சீர்தூக்கி செய்து வைத்த சேவைகள் இக்கூட்டுறவு உள்ளவரையும் எண்ணியே வழி நடக்கும்.

தம் சொந்த வாழ்வுக்கு மேலாக இச் சமூகத்திற்காக இம்மக்களுக்காக உழைக்க திடசங்கற்பம் பூண்ட இப்பெருமகனின் இழப்பால் வேரறுந்து நிற்கும் இவர்தம் குடும்பத்தவர்க்கு உள்ளங்களின் ஆழத்தில் இருந்து உருக்கமான ஆறுதலை சமர்ப்பணம் ஆக்குகின்றோம்.

உண்மையாக உழைத்த உத்தமர், புகழோடு வாழ்ந்த செம்மல், இறையவன் திருவடியில் சரணடைந்து, முத்தி பெற அவர்தம் நேய உறவுகளின் வேண்டுதல்களை காணிக்கை யாக்குகின்றோம்.

-பா.இம்மானுவேல்-
கணக்காளர் சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.ச.

## கற்பகம் நிதியம் ஆரம்பித்து வைத்த வள்ளல்!



பனம் தொழில் வல்லுநர்களின் தேவை கருதி கற்பகம் மாதாந்த சஞ்சிகையின் வெளியீட்டுக்கு வித்திட்டவரும், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஆரம்ப கால செயலாளரும், பனை அபிவிருத்திச் சபை உதயமாவதற்கு காரண கர்த்தாவாக இருந்து அச்சபையின் முதற் தலைவராக பதவி வகித்தவருமான திரு.க.நடராசா ஆசிரியர் அவர்கள் கற்பகம் சஞ்சிகைக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளதுடன், அச்சஞ்சிகையின் வளர்ச்சி நிதியாக கற்பகம் பத்திரிகை நிதியம் என்ற பெயரில் ஆரம்பித்து அதற்கு 20,080 ரூபாவை முதல் வைப்புச் செய்த பெருமைக்குரியவர் திரு நடராசா அவர்கள் ஆகும்.

புலம் பெயர்ந்து அவுஸ்ரேலியா நாட்டில் இருந்துகொண்டு யாழ் மண்ணிலிருந்து வெளிவரும் கற்பகம் சஞ்சிகைக்கு நிதியுதவி வழங்கியுள்ளமையானது பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களினதும் அங்கத்தவர்களினதும் பணியாளர்களினதும் வளர்ச்சியில் எத்தகைய அக்கறை கொண்டுள்ளார் என்பதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

1980ம் ஆண்டு கற்பகம் திங்கள் இதழ் சமாசத் தலைவர் திரு.சு.நடேசு தலைமையில் வெளியீடு செய்யப்பட்டபோது திரு.க.நடராசா அவர்கள் முதலாவது இதழை மில்க்வைற் அதிபர் திரு.க.கனகராசா அவர்களிடம் வழங்கி ஆரம்பித்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாலர்முன்கல்வி அபிவிருத்திக்கு பனை வள நிறுவனங்களின் பங்கு

ஒரு மனிதனது வளர்ச்சிக்கு கல்வியின் அவசியம் கூட்டுறவுச் சங்கங்களால் உணரப்பட்டு இச்சங்கங்களின் உறுப்பினர்கள் 1992ம் ஆண்டு தொடக்கம் பணியாளர் கூட்டுறவுக் கல்வியிலும் அங்கத்தவர் கூட்டுறவுக் கல்வி, மகளிர் குழுக் கூட்டுறவுக் கல்வி, சுயதொழில் கல்வி என்பவற்றை வழங்கியதோடு, பாலர் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து பாலர் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தையும் செயற்படுத்தத் தொடங்கின. இக்காலப்பகுதியில் கூ.அ.உதவி ஆணையாளரான திரு.தி.சபாரத்தினம் அவர்களின் ஆலோசனைக்கமைய சங்கங்கள் கல்வி மேம்பாட்டு திட்டங்களை வகுத்து செயற்பட்டன.

## பாலர் முன்பள்ளி நிலையங்கள் உதயம்

மேற்படி கல்விச் செயற்பாட்டிற்கு ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என்பன போதிய நிதி உதவி வழங்கியமையால் 1992ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை வருடம் தோறும் 3000 க்கும் மேற்பட்ட பாலர்களிற்கு கல்வி புகட்டும் சேவையை செய்து வருகின்றன. இதற்காக இந்நிறுவனங்கள்சார் மகளிர் குழுக்களில் உள்ள படித்த பெண்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு ஒவ்வோர் பகுதியிலும் உள்ள சனசமூக நிலையங்கள் ஊடாக பாலர் கல்வி வழங்கப்பட்டு வருகின்றது. எமது கூட்டுறவு நிறுவனங்களினால் நடத்தப்பட்டு வரும் பாலர்முன்கல்வி நிலையங்களில் கல்வி கற்ற மாணவர்கள் ஆண்டு ஒன்றுக்கு வேறு பாடசாலை களிற்கு சென்று அங்கும் அவர்கள் சகல செயற்பாடுகளிலும் சிறப்பாக மிளிர்வதை அதாவது விளையாட்டாக இருந்தால் என்ன, பேச்சுப் போட்டியாக இருந்தால் என்ன, எல்லாவற்றிலும் சிறந்த ஆற்றல் உள்ள மாணவர்களாக திகழ்கின்றனர். இதனை அந்தப் பாடசாலை அதிபர்களே நேரடியாகப் பாராட்டியுள்ளனர். இது எமது நிறுவனங்களிற்கு கிடைத்த நன்மதிப்பு என்பதுடன், பாலர் கல்விக்கான இந்நிறுவனங்களின் பணச் செலவு வீணாகவில்லை என்பதையும் உணர்த்தியுள்ளது.

எமது பனை தென்னை வள சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என 24 நிறுவனங்கள் யாழ் மாவட்டத்தில் இயங்குகின்றபோதும் நேரடியாக அங்கத்தவர்களுடன் தொடர்பு கொண்டு இயங்கும் சங்கங்கள் 18 ஆகும். இவை பரந்துபட்ட அமைப்பாக இருக்கின்றன. இவற்றின் செயற்பாடுகளையும் கல்வி அபிவிருத்தி திட்டங்களையும் பயிற்சிகளையும் சமாசம் வழங்கி வருகின்றது. இந்நிறுவனங்கள் 120 முனள்பள்ளிகளையும், 150 பாலர் கல்வி ஆசிரியர் களையும் 2000ற்கு மேற்பட்ட மாணவர்களையும் உள்ளடக்கியதான கல்விச் சேவையினை நடத்தி வருகின்றன.


கொத்தணிகள் அதாவது வலிகாமம் கொத்தணி தனது உறுப்புரிமைச் சங்கங்களால் நடாத்தப்படும் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு வருடம் தோறும் சீருடையும், மாணவர்களுக்கு நாளாந்தச் சத்துணவும், சீருடையும் வருடம் தோறும் நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிக்கு நிதி உதவியும் வழங்கி வருகின்றது. இவ்வாறு பல இலட்சம் ரூபாய்களை கல்விக்காக செலவிட்டு வருகின்றது. அதுபோலவே ஏனைய முன்பள்ளி மாணவர்களுக்கு அந்தந்தச் சங்கங்கள் சத்துணவும், சீருடையும் வழங்கி ஆசிரியர்களுக்கு வருடா வருடம் சீருடையும் வழங்கி பாலர் கல்வியினை மேம்படுத்த உதவுகின்றன. ஔவையாரின் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்னும் கூற்றுக்கும் "எண்என்ப ஏவை எழுத்தென்ப இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு" என்ற வள்ளுவரின் குறளுக்கும் அமைவாக இச் சங்கங்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பது அநேகருக்கு தெரியாத விடயமாகும்.

இன்றைய காலத்தில் சிறு தொகையினை வழங்கிவிட்டு பல பத்திரிகைகளில் விளம்பரம் தேடுபவர்கள் மத்தியில் பல இலட்சம் ரூபாய்களை கல்விக்காக செலவு செய்யும் பனை வளச் சங்கங்கள் கொத்தணிகள் அதனை வெளிக்காட்டாது மௌனமாகவே தமது கல்விப் பணியினைத் தொடர்கின்றன.

உடல் உள வளர்ச்சிக்கான விளையாட்டுப் போட்டிககளை தமது சொந்த செலவில் நடத்தி வெற்றியீட்டிய மாணவர்கள் உட்பட ஏனைய அனைத்து மாணவர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கி, எதிர்காலத்தில் ஒரு ஆரோக்கியமான கல்வி நிறைந்த சமுதாயத்தினை உருவாக்கும் புனிதமான செயற்பாட்டினை கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக இத்துறைசார் நிறுவனங்கள் செய்து வருகின்றன.

கடந்த 15 வருட காலத்தில் சுமார் 48,000 மாணவர்களுக்கு பாலர் கல்வியை வழங்கி அவர்களை சகல துறைகளிலும் மிளிர வைத்து அவர்கள் உற்சாகமாக பாடசாலைக் கல்வியை தொடர வழிசமைத்து நிற்கும் பெருமை எமது பனை தென்னை வள நிறுவனங்களையே சாரும்.

-சு.சிவலிங்கம்-
கல்வி உத்தியோகத்தர், கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.ச.



அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம் நடத்திய பணியாளர் கௌரவிப்பு விழாவில் பணியாளர்கள் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டிருப்பதையும், சங்கத்தின் புத்தக விற்பனை நிலையத்தை யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி தலைமைக் காரியாலய பரிசோதகர் எஸ்.கணேஸ் திறந்து வைப்பதையும் படங்களில் காணலாம்.



# வெற்றி தந்த தூது

விடிந்துகொண்டிருந்தது, எருசலேம் நகரம் இன் னும் துயிலெழவில்லை. சில பெண்களுக்கு மட்டும் தூக்கமில்லை. விடிந்தும் விடியாத நிலையில் நறுமணப் பொருட்களுடன் மங்கையர் மூவர் விரைந்து சென்றனர் ஒரு கல்லறை நோக்கி. பலவிதமான ஐயப்பாடுகளுடனும், அச்ச நடுக்கத்துடனும் சென்றாலும் தங்கள் அன்புத் தெய்வத்தை தேடி, இனிய தூய நினைவுகளுடன் கல்லறையைப் பார்த்தனர். அளவற்ற ஏமாற்றம் அடைந்தனர். ஆனால் அங்கே ஒரு வெற்றித் தூது **" அவர் இங்கே இல்லை, அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்"** (**லூக் 24:6**) வானவர் கூறக் கேட்டவுடன் ஆனந்தம் கொண்டனர். அனைவருக்கும். இந் நல்ல செய்தியை அறிவித்தனர்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு நாள், வானம் பூமிக்கு வாழ்த்துக் கூறிய ஒரு நன்நாள். ஒளியிடம் இருள் தோற்றுப் போனதை உலகத்திற்கு எடுத்துச் சொல்லுகிற பெருநாள். வீழ்ந்தோருக்கும், வறியோருக்கும் உதயம் உண்டு எனும் நம்பிக்கையை நிலைநாட்டுகின்ற திருநாள். இவ்வுலகில் ஒளிக்கும் இருளுக்கும், உண்மைக்கும் பொய்க்கும், நீதிக்கும் அநீதிக்கும், அன்புக்கும் அராஜகத்திற்கும் இடையே போராட்டம் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பெரும் போராட்டத்தில் ஒளியின் சக்திகளும் உண்மையின் சக்திகளும் நீதியின் சக்திகளும், அன்பின் சக்திகளும் வெற்றிபெறும் என்பதை உணர்த்தும் விழாதான் உயிர்ப்பு விழா. தீமைக்கும், பொய்மைக்கும், இருளுக்கும் வன்முறைக்கும் சாவுமணி அடிக்கும் விழாதான் உயிர்ப்பு விழா. உண்மை உறங்கும் ஆனால் ஓயாது! நீதி நசுக்கப்படும் ஆனால் நலியாது! அன்பு அமுக்கப்படும் ஆனால் அழியாது என்பதை சுட்டிக் காட்டும் விழாதான் உயிர்ப்பு விழா.

அன்று **"உங்களுக்கு அமைதி உரித்தாகுக"** (**லூக் 24:36**) என்ற இயேசுவின் வார்த்தை, துயரத்தின் எல்லையை அடைந்த சீடர்களின் சோர்வுக்கும், தேய்வுக்கும் ஒரு முடிவு கண்டு அவர்கள் உள்ளத்துக்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் அளித்தது. போர் நெருக்கடியும், அபாயமும் கோடிக்கு மேற்பட்ட

**யா.றமேஸ் அ.ம.தி**

அகதிகளின் அவல நிலையும், இயற்கையின் சீற்றமும், அதனால் ஏற்பட்ட சேதமும், கூட்டக் கொலைகளும், கொடுமைகளும் தாண்டவமாடும் இந்நாட்களில், கிறிஸ்துவின் உயிர்ப்பு எமக்கு அன்பு, அமைதி, நீதி ஆகிய நற்பண்புகளை அள்ளித்தரும். உயிருள்ள வார்த்தைகளை அளித்திட வேண்டும் என்பதே எங்களது ஆவலாக உள்ளது.

இன்று நாடு, சமூகம், மொழி, இனம், குலம் யாவும் மனிதனை மனிதனின்று பிரிக்கும், பின்னிப்பின் சின்னங்களாக காட்சியளிக்கின்றன. கிறிஸ்து அவனிக்கு அளித்த அன்பு, அமைதி, ஈகை, இரக்கம் இவை யாவும் மண்ணோடு மண்ணாய் மறைந்து விட்டனவா? என்ற வினா எம்மிடையே எழுகின்றது. மனிதனுடைய அறிவும் நாகரீகமும், பண்பாடும் மேம்பாடும் பல வெற்றிகளை உலகிற்கு அளித்த போதும் போரை உலகினின்று ஒழிக்கவில்லை. நாளும் துன்ப சுமைகளைச் சுமந்தவர்களாக, கவலையோடும் கண்ணீரோடும், பசியோடும் பிணியோடும் விடிவே கிடையாதா? என்று சாவின் நிழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களுக்கு இயேசுவின் உயிர்ப்பு உண்மையான விடுதலையையும் அமைதியையும் பெற்றுத்தராதா? என்பதே எங்கள் ஒவ்வொருவரினதும் ஏக்கமும் எதிர்பார்ப்புமாக உள்ளது.

**பெரியவெள்ளியை முன்னிட்டு இச் சிறப்புக் கட்டுரை பிரசுரமாகிறது**

இலட்சியவாதிகள், நல்மனம் படைத்தவர்கள், அன்புள்ளம் கொண்டவர்கள் தோல்வியைச் சந்திக்கலாம். ஆனால் அவை நிரந்தரமானவை அல்ல. ஒளி வரும் வரைதான் இருளின் ஆட்சி. ஒளி வந்துவிட்டால் இருளுக்கு வீழ்ச்சி. தர்மத்தின் சக்திகளும், நன்மையின் சக்திகளும் இறுதியில் வெற்றி அடைவது திண்ணம். இறைமையும், மனித நேயமும் வெற்றிவாகை சூடுவது உறுதி. இதுதான் பல எதிர்பார்ப்புக்களுடன் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவை நோக்கும் எமக்கு கிறிஸ்து கூறும் பதிலாகவுள்ளது. எனவே இலட்சியவாதியை சாவு தன் சங்கிலிக்குள் வைத்திருக்க முடியாது என்பதை உணருவோம். உள்ளங்களுக்குள் ஒழிந்திருக்கும் பகைமை இருளை இயேசுவின் உயிர்ப்பு என்னும் கருணை வெளிச்சத்தால் விரட்டுவோம். கண்ணீருக்கும் கவலைகளுக்கும் இனி விடை கொடுப்போம். புதிய நம்பிக்கையோடு எமது வாழ்வில் வீறுநடை போடுவோம்.




**கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம் நடத்திய சாதனையாளர் விழா-2008ல் கூ.அ.உ. ஆணையாளர் உரையாற்றுவதையும், பொது முகாமையாளர் பொ.ஜேசுராசா வரவேற்புரை நிகழ்த்துவதையும், சங்கத் தலைவர் அ.சின்னராசா மற்றும் விருந்தினர்களையும் படங்களில் காணலாம்.**




நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பு ஒரு ஜார் மன்னர் இருந்தார். அவருக்கு மூன்று புதல்வர்கள். மூவரும் காளைப் பருவம் அடைந்ததும், ஒரு நாள் ஜார் அவர்களை அழைத்து,

"மைந்தர்களே, நான் கிழவனாகு முன் உங்களுக்கு மணம் முடித்து வைக்க விரும்புகின்றேன்; உங்களுக்குப் பிள்ளைகள் பிறந்து, என் கண்ணால் என்னுடைய பேரப்பிள்ளைகளைக் கண்டு மகிழ வேண்டுமென ஆசைப்படுகிறேன்" என்றார்.

"தந்தையே, உங்கள் விருப்பம் எப்படியோ அப்படியே செய்கிறோம். நாங்கள் யாரை மணந்துகொள்ள வேண்டும், சொல்லுங்கள்" என்று புதல்வர்கள் மூவரும் பதிலளித்தனர்.

"மைந்தர்களே, மூவரும் மூன்று அம்புகளை எடுத்துக் கொண்டு திறந்த வெளியினுள் செல்லுங்கள். அம்புகளை எய்யுங்கள். அவை எங்கே போய் விழுகின்றனவோ அங்கே உங்களுக்குரிய மணப்பெண்கள் இருப்பார்கள்."

புதல்வர்கள் தலை குனிந்து தந்தையை வணங்கிவிட்டு, தலைக்கு ஓர் அம்பை எடுத்துக்கொண்டு திறந்த வெளியினுள் சென்றனர். அங்கே அவர்கள் தமது அம்புகளை எய்தனர்.

மூத்த புதல்வனுடைய அம்பு ஒரு நிலப்பிரபுவின் வீட்டு வெளிமுற்றத்தில் விழுந்தது; அந்த நிலப்பிரபுவின் மகள் அதை எடுத்துக்கொண்டாள். இரண்டாவது புதல்வனுடைய அம்பு ஒரு பணக்கார வர்த்தகரின் வீட்டு வெளிமுற்றத்தில் விழுந்தது; அந்த வர்த்தகரின் மகள் அதை எடுத்துக்கொண்டாள். கடைசிப் புதல்வன் ஜரேவிச் இவானுடைய அம்பு உயரத் தாவி அவனுக்குத் தெரியாதபடி எங்கோ பறந்தது. அவன் அதைத் தேடிக்கொண்டு எங்கெங்கோ அலைந்து, முடிவில் ஒரு சதுப்பு வெளியை வந்தடைந்தான். என்னே இது! அவனுடைய அம்பை வாயில் கவ்விக்கொண்டு ஒரு தவளை அங்கே உட்கார்ந்திருந்தது.

அந்தத் தவளையிடம் ஜரேவிச் இவான், "தவளையே, தவளையே! என்னுடைய அம்பை எனக்குத்தா" என்றான்.

"தருகிறேன், நீ என்னை மணந்துகொள்" என்றது தவளை.

"நல்லா இருக்கிறது! தவளையைப் போய் நான் மணந்துகொள்வதாவது!"

"மணந்துகொள்ளத்தான் வேண்டும், நான் தான் உனக்கு வாய்த்த மணப்பெண்."

ஜரேவிச் இவானுக்கு துயரம் நெஞ்சை அடைத்தது. தலையைக் கவிழ்த்துக் கொண்டான். ஆனால் என்ன செய்வது, வேறு வழியில்லை. தவளையை வீட்டுக்கு எடுத்துச் சென்றான். ஜார் மூன்று திருமணங்கள் நடத்தினார்; மூத்த புதல்வனை நிலப்பிரபுவின் மகளுக்கு மணம் புரிந்து வைத்தார்; இரண்டாவது மகனை வர்த்தகரின் மகளுக்கு மணம் புரிந்து வைத்தார்; பாவம் ஜரோவிச் இவான், அவனைத் தவளைக்கு மணம் புரிந்து வைத்தார்.

சிறிது காலம் ஆனதும் மூன்று புதல்வர்களையும் ஜார் கூப்பிட்டு அனுப்பினார்.

"உங்கள் மனைவிகளில் எவள் தையல் வேலையில் கை தேர்ந்தவள் எனப் பார்க்க விரும்புகின்றேன்; ஆகவே ஒவ்வொருத்தியும் நாளை காலைக்குள் எனக்கு ஒரு சட்டை தைக்கட்டும்" என்று சொன்னார்.

புதல்வர்கள் மூவரும் தலை குனிந்து தந்தையை வணங்கிவிட்டு விடைபெற்றுக் கொண்டனர்.

ஜரோவிச் இவான் வீட்டுக்குத் திரும்பி வந்து தலையைக் கவிழ்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். தவளை தரையிலே தத்திக் குதித்து அவனிடம் வந்தது.

"ஜரேவிச் இவான், ஏன் இப்படித் தலையைக் கவிழ்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாய்? உன்னை வருத்துவது என்ன?" என்று கேட்டது.

"தந்தை நாளைக் காலையில் அவருக்கு நீ ஒரு சட்டை தைத்துத் தர வேண்டுமென்று கூறியிருக்கிறார்."

"ஜரேவிச் இவான், வருந்தாதே, நீ போய்ப் படுத்துக்கொள். பொழுது புலர்ந்தால் வழி பிறக்கும்" என்று கூறிற்று தவளை.

ஜரேவிச் இவான் போய்ப் படுத்துக்கொண்டான். தவளை வெளிவாயிலுக்கு தத்திச் சென்றது. அங்கே தனது தவளைத் தோலைக் களைந்து வைத்துவிட்டு, கூர்மதியும் விவேகமும் மிக்க வசிலீசா என்னும் ஒப்புயர்வற்ற நங்கையாய் மாறியது.



கைகளைத் தட்டிக் கூவி அழைத்தாள் அந் நங்கை:

"என் பணிப்பெண்களே, சேடிகளே! சீக்கிரம் இங்கே வந்து வேலையை ஆரம்பியுங்கள்! என் தந்தை அணிந்திருப்பாரே அம்மாதிரிச் சட்டை ஒன்றை நாளைக் காலைக்குள் எனக்குத் தைத்துக் கொடுங்கள்."

காலையில் ஜரேவிச் இவான் விழித்தெழுந்தான். தவளை எப்பொழுதும்போல் தரையிலே தத்திக்கொண்டிருந்தது. ஆனால் சட்டை நேர்த்தியான ஒரு துண்டினுள் சுற்றி தயாராய் மேஜை மீது வைக்கப்பட்டிருந்தது. ஜரேவிச் இவான் மட்டில்லா மகிழ்ச்சியடைந்தான் சட்டையை எடுத்துக்கொண்டு நேரே தன் தந்தையிடம் சென்றான். ஜார் தமது மூத்த புதல்வர்கள் இருவரும் எடுத்து வந்திருந்த சன்மானங்களை அப்பொழுதுதான் பெற்றுக் கொண்டிருந்தார். மூத்த மகன் தனது சட்டையைப் பிரித்து வைத்தான்; ஜார் அதை எடுத்துப் பார்த்துவிட்டு-

"இந்தச் சட்டை ஏழைக்குடியானவனுக்குத் தான் ஏற்றதாய் இருக்கும்" என்றார்.

இரண்டாவது புதல்வன் தனது சட்டையைப் பிரித்து வைத்தான்.

"இந்தச் சட்டை குளிப்பு அறைக்குப் போகும்போது போட்டுக்கொள்வதற்குத்தான் ஏற்றதாய் இருக்கும்" என்றார் ஜார்.

பிறகு ஜரேவிச் இவான் பொன்-வெள்ளி சரிகைகளில் கண்ணுக்கு இனிய சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்த தனது சட்டையைப் பரித்து வைத்தான். ஜார் அதைக் கண்ணெடுத்துப் பார்த்ததுமே-

"இதுவல்லவா சட்டை, விழா நாட்களில் அணிந்து கொள்ளத்தக்கது!"

மூத்த சோதரர்கள் இருவரும் வீட்டுக்குச் சென்றதும் தம்மிடையே பேசிக் கொண்டனர்:

"ஜரேவிச் இவானுடைய மனைவியைப் பார்த்து நாம் சிரித்தது சரியல்ல என்றல்லவா தோன்றுகிறது. அவள் தவளையல்ல, பெரிய வித்தைக்காரி!"

மீண்டும் ஜார் தனது மூன்று புதல்வர்களையும் கூப்பிட்டு அனுப்பினார்.

"உங்கள் மனைவிகள் நாளைக் காலைக்குள் எனக்குக் கொஞ்சம் ரொட்டி தயாரிக்கட்டும்" என்றார். "சமையில் வேலையில் எவள் சிறந்தவளெனத் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்"

ஜரேவிச் இவான் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்தான்.

"ஜரேவிச் இவான், ஏன் இப்படி வருத்தமாய் இருக்கிறாய்?" என்று தவளை அவனை கேட்டது.

"நாளைக் காலைக்குள் என் தந்தைக்கு நீ கொஞ்சம் ரொட்டி தயாரித்தாக வேண்டும்" என்று ஜரேவிச் இவான் கூறினான்.

"ஜரேவிச் இவான், வருந்தாதே, நீ போய் படுத்துக்கொள். பொழுது புலர்ந்தால் வழி பிறக்கும்."

முதலில் தவளையைப் பார்த்து சிரித்த அதன் ஓர்ப்பிடிகள் இருவரும், இப்பொழுது தவளை எப்படி ரொட்டி சுடுகிறது என்று பார்த்து வரும்படி அடுப்பங்கரையில் வேலை செய்த ஒரு கிழவியை அனுப்பி வைத்தனர்.

ஆனால் தவளை பொல்லாதது. தன் ஓர்ப்பிடிகளின் எண்ணத்தைப் புரிந்து கொண்டுவிட்டது. அது சிறிதளவு மாவைப் பிசைந்து உருட்டிற்று; கணப்பு அடுப்பின் உச்சியை உடைத்து அந்தத் துளையினுள் மாவு உருண்டையைப் போட்டது. கிழவி உடனே ஓர்ப்பிடிகள் இருவரிடமும் ஓடித் தான் கண்ணுற்றதை அவர்களிடம் சொன்னாள். தவளை செய்தது போலவே ஓர்ப்பிடிகளும் செய்தனர்.

தவளை வெளி வாயிலுக்குத் தத்தி சென்று, கூர்மதியும் விவேகமும் மிக்க வசிலீசாவாய் மாறி, கைகளைத் தட்டியது.

"என் பணிப்பெண்களே, சேடிகளே! சீக்கிரம் இங்கே வந்துவேலையை ஆரம்பியுங்கள்!" என்று அந்நங்கை கூவினாள். "என் தந்தையின் வீட்டில் நான் சாப்பிடுவேனே அது போன்ற மிருதுவான கோதுமை ரொட்டியை நாளைக்குக் காலைக்குள் எனக்குத் தயாரித்துக் கொடுங்கள்"

(அடுத்த இதழில் முடியும்)




# ஏற்காடு மலையில்




சேலம் அருகே உள்ள ஏற்காடு மலையடிவாரம் சுண்ணாம்பு கரடி என்கிற இடம் உள்ளது. இங்கு தான் ஜெய்சங்கர் நடித்த பல படங்களின் ஆக்சன் காட்சிகள் படமாக்கப்பட்டன. முன்பு ஒளிப்பதிவாளராக விளங்கிய கர்ணன் அங்கு தான் படப்பிடிப்பு நடத்த விரும்புவார். அந்த இடத்தில் தற்போது விஜய் நடிக்கும் குருவி படத்தின் சேஸிங் காட்சிகளை எடுத்து வருகிறார் இயக்குநர் தரணி.

விஜய் பெரும்பாலும் சென்னையிலும் ஹைதராபாத்திலும் உள்ள ஸ்டுடியோக்களில் மட்டுமே செட் போட்டு எடுக்கச் செல்வார். எல்லாம் பாதுகாப்பு நலன் கருதிதான். ஆனால் தற்போது ஆட்சியில் இருக்கும் முதல்வரின் பேரன் உதயநிதி இந்த குருவி படத்தை தயாரிப்பதால் பாதுகாப்பு இருக்கும் என்று அந்த லொக்கேஷனில் நடிக்க வந்திருக்கிறார். இப்படத்தில் விஜய் ஜோடியாக திரிஷா நடிக்கிறார்.

# தனுஷிக்காக தன் கொள்கையை கைவிட்ட நயன்

தேவைப்பட்டாலொழிய முத்தக்காட்சிகளில் நடிக்க மாட்டேன் என்ற கொள்கை வைத்திருக்கிறார் நயன்தாரா. (தேவை, தேவையில்லையன்னு எப்படி தெரிஞ்சுப்பாராம்?) நல்லவேளை, ரசிகர்கள் புண்ணியம் பண்ணியிருக்கிறார்கள்.

'யாரடி நீ மோகினி படத்தில் இப்படி ஒரு முத்தக்காட்சி தேவைப்பட்டதாம். அதனால் தனுஷை இறுக அணைத்து ஒரு உம்மா கொடுத்திருக்கிறாராம் இந்த அழகான ராட்சகி. இவர் முத்தம் கொடுக்கும்போது எடுக்கப்பட்டிருக்கும் படங்களை எந்தப் பத்திரிகைக்கும் தரக்கூடாது என்றும் கட்டளை போட்டிருக்கிறாராம். முத்த விடயத்தில் தனுஷை அங்கீகரிக்கிற நயன்தாரா மனசு, விஷால் விடயத்தில் மட்டும் ஒத்துழையாமை செய்கிறது.ஏன்?

தமிழ் சினிமாவில் இருதுருவங்களாக இருப்பவர்கள் சிம்புவும் தனுஷும் தான்.

தென்னை மரத்தில் தேன் தடவினால், பனை மரத்தில் எறும்பு மொய்க்கும் என்பது நயன்தாராவுக்கு தெரியாதா என்ன? இப்படி ஒரு ஏடாகூடமான கணக்கில்தான் தனுஷுக்கு முத்தம் கொடுத்திருக்கிறாராம். ஆனால் ஒன்று, தனுஷிடம் கொடுக்கிற முத்தம் லாக்கரில் வைத்த மாதிரி பத்திரமாக இருக்கும். இதுவே சிம்புவுக்கு கொடுத்தால் போஸ்டராகி பொலிஸ் வரைக்கும் போகும்!



'யாரடி நீ மோகினி'

# பிரசன்னாவுக்கு வில்லன் ஸ்பைடர்மேன் நாயகன்

'சாதுமிரண்டா', 'அஞ்சாதே' என அடுத்தடுத்து தான் நடித்த இரண்டு படங்களும் வெளியான சந்தோஷம் பிரசன்னாவிடம்.

இனி நான் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடிகளிலும் கவனமுடன் இருப்பேன் என்னும் பிரசன்னாவை நோக்கி பட வாய்ப்புகள் குவிய ஆரம்பித்துள்ளன. இருப்பினும், நல்ல கதை இருந்தால் மட்டுமே ஒப்புக் கொள்வது என்பதில் உறுதியாக இருக்கிறார்.

'அஞ்சாதே' படத்திற்கு பிறகு அவர் நடித்த 'கண்ணும் கண்ணும்' வெளியீட்டுக்காக காத்திருக்கும் நிலையில், புதிய படமொன்றில் நடிக்க கையொப்பமிட்டுள்ளார். அந்த படத்திற்கு 'அச்சமுண்டு அச்சமுண்டு' என பெயரிடப்பட்டுள்ளது.



இதில் பிரசன்னாவுக்கு ஜோடியாக சிநேகா நடிக்க மற்றக் கதாபாத்திரங்களில் பெரும்பாலானோர் ஹாலிவுட் நட்சத்திரங்கள். வில்லன் கதாபாத்திரத்திற்காக யார் யாரை யோ யோசித்து பார்த்து கடைசியில் ஸ்பைடர் மேன் உள்ளிட்ட ஆங்கிலப் படங்களில் நடித்து புகழ்பெற்ற வில்லியம் டிபோவை தேர்வு செய்திருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் திகதி இல்லையென்று நடிக்க மறுத்த வில்லியம் படத்தின் கதையைக் கேட்டு விட்டு நடிக்க சம்மதித்துவிட்டாராம்.

# காதலில் நம்பிக்கை இல்லை




காதல் பற்றி நடிகை கோபிகா கூறும் போது காதல் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

அதைப்பற்றி தெரிந்து கொள்ளவும் நான் விரும்பவில்லை. எனக்கு கணவராக வருபவர் எப்படி இருக்கவேண்டும் என்ற எண்ணமோ கனவோ எனக்கு இல்லை. காதலிப்பது, காதலிக்கப்படுவது இதில் எது சுகமானது என்பது கூட எனக்குத் தெரியாது. அது காதலில் ஈடுபட்டவர்களிடம் கேட்டால் தெரியும். என்னைப் பொறுத்தவரை பெற்றோர் பார்த்து முடித்து வைக்கும் திருமணமே சிறந்தது என்கிறார்.



# “உழைப்பாளர்களின் உயர்வுக்காய் உழைத்த தொண்டன் ஜேசு!”

கி.சிவநேசன்

எனது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய ஜேசு அண்ணரின் பிரிவுச் செய்தி இன்று நண்பகலில் அறிந்து எனது உள்ளத்துள் அழுது கொண்டேன்.

1987ம் ஆண்டிலே நான் சமாசத்தின் பொது முகாமையாளராக இணைந்து கொண்டபோது அவரின் அன்பான வரவேற்பும் அரவணைப்பும் கிடைத்த அந்த நாளை ஒரு கணம் மனக் கண்ணிலே பார்க்கிறேன்.

கள்ளமில்லாத குழந்தை உள்ளத்தோடும், விசுவாசத்துடனும், தொழிலாளர் வாழ்வுக்காக உழைக்கின்றேன் எனும் மனத் தெளிவுடனும் தான் சேர்ந்த பதவியைவிட சேவையினால் உயர்ந்த, சிறந்த கூட்டுற வாளனாக அவர் என்றும் என் மனக்கண்ணில் காட்சியளிப்பார்.



ஜேசு அண்ணர், துவிச்சக்கர வண்டியில் தூர இடத்தில் இருந்து வருகை தந்து தனது நோயினையும் பொருட்படுத்தாது நிறுவன வளர்ச்சியே மூச்சாக கொண்டு செயலாற்றிய சமூகத் தொண்டராக மதிக்கப்பட்டார்.

**தன்னுடன் சமாசத்தில் பணிபுரிந்த அமரர்.ஜேசுதாசன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து அவருக்கு இரங்கல் தெரிவித்து, சமாச முன்னாள் பொதுமுகாமையாளர் கி.சிவநேசன் அவர்கள், சாவடைவதற்கு சில நாட்களுக்கு முன் கற்பகம் இதழுக்கு அனுப்பிய இரங்கற் செய்தி அவரின் மறைவின் பின் இங்கே பிரசுரமாகிறது.**

களஞ்சியப் பொறுப்பாளராக, காசாளராக, அச்சகப் பொறுப்பாளராக இருந்து எனக்கு தன் அனுபவத்தின் முதிர்ச்சியினை ஆலோசனையாக தந்த நல்லுள்ளம் கொண்டவர். “கற்பகம்” பத்திரிகையின் வெளியீட்டில் அமரர் கே.வி.நடராசனுக்கு ஆத்ம நண்பராக இருந்து உழைத்தவர். சமாசத்தின் வளர்ச்சிக்கும் தொழில்சார் மக்களின் வாழ்வு வளம்பெற விசுவாசம் மிக்க பணியாளனாக உயர்ந்த அண்ணர், எனது குடும்பத்தின் நன்மதிப்பைப் பெற்றவர் ஆவார். ஓர் உடன் பிறப்பைப் போல பழகிய அவரின் பிரிவு, பனை தென்னை வளம் சார்ந்த உழைப்பாளர்களுக்கும், நிறுவனங்களுக்கும் பேரிழப்பாகும் என்பது உண்மையே. அவரின் பிரிவுச் செய்தி அறிந்தும் காலத்தின் சூழலால் அவரின் அன்பு மனைவி, மகன், சகோதரர்களுடன் உடனிருந்து துயரினை பகிர முடியாமை எனது குடும்பத்தாருக்கு வேதனை தருகிறது. இருப்பினும் இங்கிருந்து அவரின் பிரிவுத் துயரினை மனைவி, மகன், சகோதரர்களுடன் எனது குடும்பமும் இணைந்து பகிர்ந்து கொள்கின்றோம்.

அண்ணரின் ஆத்ம சாந்திக்காக இறையருளை வேண்டுகின்றேன்.

## மருத்துவக் குறிப்பு




**முறை 1:** நல்ல பாம்பு உட்பட எவ்வித கொடிய பாம்புகளும் மனிதர்களைத் தீண்டிவிடும் நேரங்களில் விஷம் நீங்கிக் குணம்பெற எளிய முறையைப் பின்பற்றலாம். பாம்பு கடித்த சுமார் அரை மணி நேரத்திற்குள் மிக அருகில் கிடைக்கும் எவ்வித வாழை மரப்பட்டையையும் வெட்டி எடுத்து வந்து நெருப்பு அனலில் வாட்டி வதக்கிப் பிழிந்து சாறு எடுத்து அரை கப் சாற்றை வாயினுள் ஊற்றிவிட வேண்டும். பல் கிட்டிக் கொண்டிருக்கும் பட்சத்தில் உபகரணங்களைக் கொண்டாவது வாயைத் திறக்கச் செய்து சாற்றை ஊற்றிவிட வேண்டும். மேலும் ஒரு கப் சாறு வாழைப் பட்டையிலிருந்து பிழிந்தெடுத்து கடிபட்ட வெறும் மனித உடம்பின் மீது பூராவும் பூசி தீப்பந்த அனல் காட்டி நன்றாக அரைமணி நேரம் தேய்க்க வேண்டும்.

இவ்வாறு செய்வதால், மயிர்க்கால் துவாரங்களின் வழியாக வாழைப் பட்டைச்சாறு உட்சென்று ரத்தத்தில் கலந்துள்ள விஷத்தை முறிவு செய்து விடுகின்றது. உணர்வும் ஏற்பட்டு விடுகின்றது. சுய உணர்வு வந்தவுடன் இரண்டு நாட்களுக்கு (பசி எடுத்த பின்னரே) அரை வயிறு ஆகாரம் மட்டுமே கொடுத்து வரவேண்டும். இத்தினங்களில் எவ்வித இறைச்சி உணவும் கூடாது.

**முறை 2:** பாம்பு கடித்து விஷம் ஏறி மயக்கமாகி விட்டிருந்தால், குப்பைமேனி தழை பறித்து வந்து கசக்கிப் பிழிந்து சாறு எடுத்து ஒவ்வொரு கண்ணிலும் ஒரு சொட்டு சாறு விட்டால் மயக்கம் சிறிது நேரத்தில் நீங்கிவிடும். மயக்கம் தெளிந்த பின்போ மயக்கமே அடையாதிருந்தாலோ கீழ்க்கண்டவைகளைத் தயாரித்துக் கொடுக்க வேண்டும்.

**நல்லெண்ணெய் எனப்படும் எள்ளெண்ணெய்– 40மி.லீ**
**தும்பை இலை பிழிந்த சாறு – 20 மி.லீ**
**நசியம் எனப்படும் மூக்குப் பொடி – 2 ஸ்பூன்**

மேற்கண்ட மூன்று வகைகளையும் ஒன்றாகக் கலக்கி வாயினுள் உள்ளுக்கு ஊற்றி விழுங்கச் செய்ய வேண்டும். உள்ளே விழுங்கிய உடனே வாந்தியாகும். வாந்தியான பின் 3,4 மணி நேரங்கழித்து ரசம், புழுங்கல் அரிசி சோறு கால் வயிறு ஆகாரமாகக் கொடுக்கலாம். இரவு நேரமாக இருந்தால் உணவு கொடுக்க வேண்டியதில்லை.

### பாம்பு தீண்டி மூச்சு நின்றுவிட்டமாதிரி இருப்பவர்களுக்கு:–

பாாம்பு கடித்து மயங்கி சுவாசம் இல்லாவிட்டால் விஷம் தீண்டப்பட்ட நபரின் மீது முதுகின்மேல் ஒரு பிரம்புக் கோலால் பளீர் பளீர் என ஓங்கி அடிக்க வேண்டும். பிரம்பு அடி விழுந்த இடத்தில் வீக்கம் ஏற்பட்டால், சுவாசம் இன்றியும் உயிர் சக்தி உடம்பிலுள்ளதாக அர்த்தம் கொள்ள வேண்டும். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் உடம்பில் விஷக்கடி பட்ட இடத்தைக் கத்தியால் கீறி, அப்பகுதியில் பெட்டைக் கோழியின் ஆசனவாயை வைத்து அழுத்திப் பிடித்தால் சுமார் அரை மணி நேரத்தில் மேற்படி நபருக்கு சுவாசம் ஆரம்பமாகி விடும். இந்த அரை மணி நேரத்திற்குள்ளேயே 2,3 பெட்டைக் கோழிகள் விஷம் (மனித உடம்பிலிருந்து ஏறி மடிந்து விடலாம்).

இதற்குப் பின்னர் முன்கூறிய மூக்குப் பொடி, நல்லெண்ணெய், தும்பைச்சாறு கலவையை உள்ளுக்கும் கொடுத்து விடலாம். பின் 5 டிஸ்பூன் தேங்காய் எண்ணெய்யை குடிக்கச் செய்து விடலாம்.




## குயிலே குரல் ஒன்று தருவாய்

குயிலே குரல் ஒன்று தருவாய் -இந்தக்
இவலயத்தின் கொடுமைதனைப் பாடவே (குயிலே)



நெஞ்சோடு நெஞ்சொட்டி
நெளியும் புழுவானாள் அவள்
மஞ்சத்தில் புரளுகின்றாள்
மங்கையோ புதுமலராய்

ஏழையாய்ப் பிறந்திட்டாலும் இவள்
ஓவியமாய்த் திகழ்கின்றாள்
காளையர்கள் கைப்பிடிக்க
ஏனோ மறுக்கின்றார்

வீடோ அவளுக்குச் சிறை வாசம்
நாடோ பொருளில் மிக மோசம்
வெம்புவதோ அவள் இதய நாதம்
தென்படுமோ அவளுக்கு எதிர்காலம்
கோரிக்கை அற்றுக் கிடக்கின்றாள் -அவள்
வேரில் பதித்த பலாக்கனியாய்
நாரியிவள் விதிவசமோ அந்தோ!
நாசமோ இவளின் ஆசைக் கனவுகளும்

பொருள் அற்றார் பூப்பர் என்றால்
பொருள் ஏன் அவளுக்கும் கிடைக்கவில்லை
அருள் கொண்ட கடவுளும் ஏன்
அவள் கண்ணீரைத் துடைக்கவில்லை

விதி என்று சொல்வதா இல்லை
வீணர்களின் சதியென்று சொல்வதா
கதியேதும் அறியாமல் அவள் வாழ்வு
கண்ணீரில் மிதப்பதா?

**புலவர் கதிர் சீனித்தம்பி**
கருணாநிதி ச.ச.நி., வல்வெட்டி.

## சோதனைகளை சாதனையாக்கு

உலகினில் தோன்றி முடிவுறாமல் தொடரும்
மானிட வாழ்க்கையில் அன்பு, பண்பு, பாசம்
எனும் காவியங்கள் தோன்றிட
கல்வியின் வேலையில் வாழ்க்கையில்–என்று
பல சோதனைகள் தோன்றிட –அறிவு
விவேகம்ஆளுமை கொண்டதைச் சாதனையாக்கு
பெண்ணவள் பேதையில்லை மானிட வாழ்வினில்
தாய்மையில் சாதனைதான் அவள் படைத்திட்டாள்
கண்ணினால் கதை சொல்லி காதலை வளர்த்திட்டாள்
மண்ணினில் உன்சேவை மகத்தாக பேசவென்று
சோதனை யாவையும் சாதனையாக்கு!

விட்டுக்கொடுத்து விவேகமாய் நடந்து
கற்றது யாவையும் மற்றவர்க்குரைத்து
ஊரினில் கல்வியை பரவலாய் படித்திட்டு
பாமர மக்களை பாவலராக்கிட
சோதனை யாவையும் சாதனையாக்கு

மாறிடும் உலகினில் மாற்றங்கள் பலவர
புதுவகை முயற்சிகள் புவிதனில் தோன்றிட
உலகமே சுருங்கி உன்கையில் வந்திட
தேடிய செல்வங்கள் அறவழி பயன்பட
சோதனை யாவையும் சாதனையாக்கு

தமிழதை வளர்க்கும்தமிழனாய் வாழ
தாய் மண்ணை போற்றலும் சேய் அவன்போல
உலகமே போற்றும் உத்தமராக
மதிவழி நடந்து மாண்புற வாழ
சோதனை யாவையும் சாதனையாக்கு

பட்டம் பெற்று பதிவுகள் பெற்றிட
எட்டுத்திக்கும் உன்புகழ் பேசிட
உத்தம சேவையால் உயர்வினை அடைந்திட
மற்றவர் மனங்களை மகிழ்வாய் போற்றிட
சோதனை யாவையும் சாதனையாக்கு

வாழ்க்கைப் பயணம் மகிழ்வாய் அமைந்திட
எடுத்த பிறவியை சிறவுர முடித்திட
கடமைகள் யாவையும் கனிவாக முடித்திட
இறைபதம் தான் அதை இனிதே அடைந்திட
சோதனை யாவையும் சாதனையாக்கு

**ச.கிரோசிகா – தரம்–09**
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி

## கல்வி

கற்பனையின்றி கனவின்றி கடினமாய்
கள்ளமில்லாது கருத்துடனே
காணுகின்ற அனைத்தினையும் கவனமுடன்
கற்றிட்டால் களித்திடுமே வாழ்வு அவனியிலே!

கல்லாதவிடத்திலே புல்லும் முளையாது
மல்லாத கல்வி மாண்டாலும் வாராது
கொண்டாலும் கல்வி குறைந்தே போகாது
விண்டாலும் வாழ்வு விழுக்காடாகி விடும்!

தண்டாமல் கல்வியைப் பெறவும் முடியாது
தரணியிலே இதுவின்றி மதிப்பேதும் கிடையாது
தண்மையான வாழ்விற்கு தக்க துணையாய் இருக்கும்
தற்பெருமை இல்லாதவர்க்கு உற்ற துணை நீ அன்றோ

விண்ணாளும் வானவர்க்கு மேலாய கல்வியினை
மண்ணாளும் மன்னவர்க்கும் மற்றுள்ளோர்க்கும்
தன்சோலை தனியிருந்து உபதேசித்த வேதமதை
தவறாமல்நாம் கற்று தரணிமிசை வாழ்ந்திடுவோம்!

**S.P.தர்ஷா.**
**கல்வளை, சண்டிலிப்பாய்.**

## பொன்மொழிகள்

- வருவதும் போவதும் இரண்டு –இன்பம், துன்பம்
- வந்தால் போகாதது –புகழ், பழி
- போனால் வராதது –மானம், உயிர்
- தானாக வருவது இரண்டு – இளமை, மூப்பு
- நம்முடன் வருவது இரண்டு – பாவம், புண்ணியம்
- அடக்கமுடியாதது இரண்டு – ஆசை, துக்கம்
- தவிர்க்க முடியாதது – பசி, தாகம்
- நம்மால் பிரிக்க முடியாதது இரண்டு – பந்தம், பாசம்
- அழிவைத் தருவது இரண்டு – பொறாமை,கோபம்
- எல்லோருக்கும் பொதுவானது இரண்டு – பிறப்பு, இறப்பு

**க.ப.லோகநாதன்(கல்விஉத்தியோகத்தர்),**
**சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம்)**

## விடுகதைகள்

01. முத்து முத்தாய்த் தோரணம் தரையில் விழுந்து ஓடுது–அது என்ன?
02. வெள்ளைக் கத்தரிக்காய் கள்ளக் கூக்குரல் போடுது – அது என்ன?
03. வெள்ளையாம் வெள்ளைக்குடம், விழுந்தால் ஓட்டைக் குடம் –அது என்ன?
04. அறிவின் மறுபெயர் அது இரவில் வருவது –அது என்ன?
05. இந்த ஊரில் அடிபட்டவன் அடுத்த ஊரில் போய் சொல்வான்–அவன்யார்?
06. ஒற்றைக் காலால் ஆடுவான் ஓய்ந்து போனால் சாய்வான்– அவன் யார்?
07. தச்சன் செய்த பெட்டி தானே திறந்து மூடும்– அது என்ன?
08. கடித்தால் கடிபடாது பிடித்தால் பிடிபடாது – அது என்ன?
09. பவள மாளிகைக்குள் பளிங்குச் சிற்பங்கள் – அவை என்ன?
10. கடைந்தெடுத்த வள்ளல் மணம் வீசும் வள்ளல் – அது என்ன?

**விடைகள்**

01. மழை 03. முட்டை 05. தந்தி 07. கண் 09. வாய், பற்கள்
02. சங்கு 04. மதி 06. பம்பரம் 08. தண்ணீர் 10. நெய்

## பொது அறிவு

*புதுமணத் தம்பதிகளை பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க என வாழ்த்துவது வழக்கம். அந்தப் பதினாறும் எவை? இதோ இவைதான்.*

| | | | |
|---|---|---|---|
| புகழ் | நன்மைகள் | நுகர்ச்சி | இறைமை |
| கல்வி | பொன் | அறிவு | துணிவு |
| ஆற்றல் | நெல் | அழகு | நோயின்மை |
| வெற்றி | நல்வாழ்வு | பெருமை | ஆயுட்காலம் |

### நாடுகளும் பாராளுமன்றமும்

- அமெரிக்கா ஜனாதிபதி மாளிகை – வெள்ளை மாளிகை
- ரஷ்யா ஜனாதிபதி மாளிகை – கிரம்லின்
- இந்தியா ஜனாதிபதி மாளிகை – ராஷ்டிரபதி பவன்
- இந்தியப் பாராளுமன்றம் – லோக்சபா
- இலங்கைப் பாராளுமன்றம் – பாராளுமன்றம்
- ஐக்கிய அமெரிக்க பாராளுமன்றம் – காங்கிரஸ்
- ரஷ்ய பாராளுமன்றம் – சுப்ரீம் சோவியத்
- பிரித்தானிய பாராளுமன்றம் – பாராளுமன்றம்
- ஜேர்மன் பாராளுமன்றம் – ரிக்ஸ்ரேஜ்







இந்த இதழில் நாங்கள் ஆபிரிக்காக் கண்டத்தில் இருக்கும் மொசாம்பிக் நாட்டைப்பற்றித் தெரிந்து கொள்ளு வோம்.

## மொசாம்பிக்


| | |
|---|---|
| தலைநகரம் | : மாபுடோ |
| மக்கள் தொகை | : 16,000,000 |
| 2000ம் ஆண்டிலே மக்கள் தொகை | : 2.25 கோடி |
| பரப்பளவு | : 799,380 ச.கி.மீ |
| மதம் | : 60% பழங்குடியினர்<br>18% கிறிஸ்தவம்<br>16% இஸ்லாம் |
| மொழிகள் | : போர்த்துக்கீஸ்,பாண்டு, சுவாகிலி |
| கல்வியறிவு | : 32 சதவீதம் |
| ரெலிபோன் | : 257 பேருக்கு ஒன்று |
| தொலைக்காட்சி | : 2000 பேருக்கு ஒன்று |
| வானொலி | : 30 பேருக்கு ஒன்று |
| மருத்துவமனைப் படுக்கை | : 1160 பேருக்கு ஒன்று |
| மருத்துவர் | : 45ஆயிரம் பேருக்கு ஒருவர் |
| தாதிகள் | : 4ஆயிரம் பேருக்கு ஒருவர் |
| சராசரி ஆயுட்காலம் | : 48 வயது |
| பத்திரிகை | : 2 நாளிதழ்கள் |
| பொருளாதாரம்: | சோளம், நெல், தேங்காய், முந்திரிப் பருப்பு, கரும்பு. |
| முக்கிய விளைபொருள்: | நிலக்கரி, வைரங்கள், பாக்சைட் அகழ்ந்தெடுப்பு |
| தனிநபர் வருமானம்: | 3500ஆயிரம் ரூபா (ஆண்டுக்கு) |
| நாணயம் | : மெட்டிக்கல் |
| இராணுவ பலம் | :- தரைப்படை-30ஆயிரம் பேர்,<br>விமானப்படை-ஆயிரம் பேர்,<br>கடற்படை- 900 பேர் |
| சிறப்பம்சம் | : மரகத உற்பத்தியில் உலகிலேயே 2வது இடம். |




இங்கே ஒருவர் முதற் தடவையாக அலுவலகம் ஒன்றிற்கு செல்வதற்காக வந்தவர் அலுவலகத்தை அடைவதற்கான வழியைக் கண்டு பிடிப்பதில் சிரமப்படுகின்றார். உங்களுக்கு வழி தெரிந்தால் தயவு செய்து அவருக்கு உதவுங்கள்!

## 'கற்பகம்' வாசகர்களுக்கான வார்த்தைச் சதுகுடு

### போட்டி-02




**இடமிருந்து வலம்:**

1. புத்திர பாசத்தால் உயிரிழந்த ஒரு இதிகாச மன்னன்.
4. அகத்தின் அழகு தெரிவது இதில் (திரும்பியுள்ளது)
5. பாம்பு இந்த வகையைச் சேர்ந்தது.
7. ஔவையாரும் கூறிய இப்பணி மேன்மையானது.
8. சிலந்தியின் பொறி-திரும்பியுள்ளது.
9. இது ஒரு மரம்-ஆட்சியையும் குறிப்பது.
12. கல்லாக்காரம் செய்வதற்குரிய மூலப்பொருள்.

**மேலிருந்து கீழ்:**

1. இது நீச்சல் பழகுவதற்கும் பயன்படும்.
2. அழகிய பெண்களை இவளுக்கு உவமை சொல்வர்.
3. இலக்கியத்தில் தூது சென்ற பறவை.
6. பிடைப்பதற்கு பயன்படுவது.
7. இதற்கு ஒப்பேயில்லை.
10. இது இருந்தால் சித்திரம் வரையலாம்
11. செஞ்சோற்றுக் கடன் தீர்த்த கொடை வள்ளல்-தலைகீழாயுள்ளது.

அன்பான கற்பகம் வாசகர்களே! உங்கள் சிந்தனைத் திறனை தூண்டும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்கு கொண்டு பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெறுங்கள்!

### போட்டி விதிகள்

- இத்தரிய விடையை இதே கூப்பனில் நிரப்பி இப்பகுதியை கத்தரித்து அனுப்புதல் வேண்டும்.
- சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் அதிஷ்டசாலிகள் மூவருக்கு பரிசில்கள் வழங்கப்படும்.
- சரியான விடையை அனுப்பும் மேலும் மூவருடைய பெயர்கள் கற்பகத்தில் பிரசுரிக்கப்படும்.
- அனுப்புனர் தனது பெயர், முகவரி என்பவற்றை தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- சமாசப் பணியாளர்களும், கற்பகம் ஆசிரியர் குழு உறுப்பினர்களும் இதில் பங்குபற்ற முடியாது.
- விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்- 05-04-2008
- அனுப்ப வேண்டிய முகவரி: ஆசிரியர், கற்பகம், சமாசப் பதிப்பகம், இல.499, கே.கே.எஸ். வீதி.யாழ்ப்பாணம்.

### போட்டி-01 விடைகள்

**மேலிருந்து கீழ்:**

| | |
|---|---|
| 1. இராவணன் | 6. அமரர் |
| 3. கரி | 8. பாரி |
| 5. புன்னகை | 10.பாணி |

**இடமிருந்து வலம்:**

| | |
|---|---|
| 1. இயக்கர் | 8. பாமரர் |
| 2. வனம் | 9. ஏரி |
| 4. பின் | 11.ஏணி |
| 7. புகை | |

**சரியான விடையை அனுப்பியோரில் குலுக்கல் மூலம் தெரிசெய்யப்பட்டு பரிசு பெறும் அதிஷ்டசாலிகள்**

01. 1ம் பரிசு– மா.சுபர்ணா, சிவன் வீதி, ஆவரங்கால்
02. 2ம்பரிசு–ஆ.சுனேஸ்கா, சந்திரபுரம், மட்டுவில் வடக்கு,சாவகச்சேரி
03. 3ம் பரிசு–மா.தர்சி, சர்வோதயா வீதி, ஆவரங்கால்.

**பாராட்டுப் பெறுவோர்:–**

க.அருட்செல்வம்–தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி, டச்சு வீதி, சாவகச்சேரி.
த.தர்சன்–மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.

**வெற்றி பெற்றோர் சாவகச்சேரி, அச்சுவேலி ப.தெ.வ. அ. கூ. சங்கங்களில் பரிசில்களை பெற்றுக் கொள்ளலாம்.**

அனுசரணை
கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர் சிக்கன சேமிப்புக் கூட்டுறவுச் சங்கம்

## கூ.அ.உ.ஆணையாளரினால் 31-01-2008ல் கூட்டப்பட்ட தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுக்கான மாதாந்த மாநாட்டு முக்கிய தீர்மானங்கள்

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சித்தவைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம், சமாசம் ஆகியவற்றின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் கலந்துகொண்ட மாதாந்த மாநாடு கடந்த ஜனவரி மாதம் 31ம் திகதி சமாச மண்டபத்தில் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் சு.கணேசு தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளை விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் கள்ளின் விலைகளிலும் சாராய விலைகளிலும் மாற்றம் செய்யப்பட்டு குறித்த விலையிலேயே விற்பனை செய்யப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் மாற்றம் செய்யப்பட்ட விலைகள் பின்வருமாறு,

**கள் விலைமாற்றம்**

| விபரம் | கொள்விலை | விற்பனைவிலை |
|---|---|---|
| பனங்கள்ளு | 21.00 | 30.00 |
| தென்னங்கள்ளு | 29.00 | 40.00 |
| போத்தல் கள்ளு 375 மில்லி | | 30.00 (ஆ.கூடியது) |
| போத்தல் கள்ளு 675 மில்லி | | 50.00 (ஆ.கூடியது) |

**சாராய விலைமாற்றம்**

| விபரம் | விலை |
|---|---|
| தென்மராட்சிக் கொத்தணி | 480.00 |
| வலிகாமம் கொத்தணி | 530.00 |
| சமாசம் திக்கம் | 570.00 |

01-02-2008 முதல் இவ்விலையே நடைமுறையிலிருக்கும் எனவும் எல்லாச் சங்கங்களும் குறித்த இவ்விலையிலே செயற்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

### பொதுமுகாமையாளர் பதவி வெற்றிடம்

பின்வரும் சங்கங்களிலுள்ள பொதுமுகாமையாளர் பதவி வெற்றிடம் பகிரங்க விளம்பரம் செய்து பொதுமுகாமையாளர்களை நிரந்தரமாக நியமனம் செய்யவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. அச்சங்கங்கள் வருமாறு,

காரைநகர், கோப்பாய், ஊர்காவற்றுறை, மானிப்பாய், வலிகாமம் கொத்தணி, சாவகச்சேரி.



அளவெட்டி-மல்லாகம் ப.தெ.கூ.சங்கம் நடத்திய பணியாளர் கௌரவிப்பு விழாவில் 20 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய பணியாளர்களில் ஒருவரான க.சீவரத்தினத்திற்கு சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் திரு.மா.சந்திர காந்தன் பரிசில் வழங்கி கௌரவிப்பதை படத்தில் காண்க.

### பயிற்சிகளுக்கு..............

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் அபிவிருத்திக்கு வினைத்திற னுடைய பணியாளர்களை உருவாக்கி அவர்கள் மூலம் சங்கங்களின் செயற்பாடுகளை ஆரோக்கியமுள்ளதாக மாற்றியமைப்பதற்கு இத்தகைய பயிற்சிப்பட்டறைகள் உந்துசக்தியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை என்று கூறினார்.

இப்பயிற்சிப் பட்டறையில் யாழ்.பல்கலைக் கழக வணிகத்துறை, முகாமைத்துவத்துறை விரிவுரையாளர்கள் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார்கள்.

உழவு இயந்திரம் வாடகைச் சேவை
தரமான பனை வெல்லம், பாணி, போத்தலில் அடைக்கப்பட்ட பதநீர், கள் மற்றும் பனைசார் உற்பத்திகள்
கிராமிய வங்கிச் சேவை
சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
பாலர் பாடசாலை கல்விச் சேவை
அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
டச்சு வீதி, சாவகச்சேரி.
T:P:0602213572

இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2008ம் ஆண்டு மார்ச் மாதம் வெளியிடப்பட்டது.